2017 ஜூலை 4]

(இ) விவசாயிகள் அனைவருக்கும் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசவிருக்கிறார்.*

முற்பகல் 11–45

***திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்ற காரணத்தினால் ஒரு கருத்தை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். ஏற்கெனவே, இந்த மாநிலத்தை வறட்சி மாநிலமாக அறிவித்தது இந்த அரசுதான். எனவே, அனைத்து விவசாயிகளுக்கும் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் கேட்டார்கள். 28–6–2014 அன்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சிறு விவசாயிகள், குறு விவசாயிகளுக்கு மட்டும்தான் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று ஆணையில் இருக்கிறது. அனைத்து விவசாயிகளுக்கும் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இந்த மாமன்றத்திலே வைத்தார்கள். இதுசம்பந்தமாக நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கிறது என்று அரசு இங்கே சொன்னது. அவர் சொன்னார், 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு; எனவே, நீங்கள் முடிவெடுக்கலாம், விவசாயிகளைப் பிரித்துப் பார்க்காமல் நீங்கள் கொடுங்கள் என்று சொன்னபொழுது, ஒரு கொள்கை முடிவிலே நீதிமன்றம் தலையிடலாமா? எனவே, நாங்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறோம் என்று சொன்னீர்கள். எனவே, இந்தக் கொள்கை முடிவின் அடிப்படையிலே நீதிமன்றத்தில் இன்றைக்கு அதற்குத் தடை ஏற்பட்டிருக்கிறது. கொள்கை முடிவு எடுப்பவர்கள் நீங்கள். எனவே, கொள்கை முடிவை நீங்கள் எடுக்கலாம். அனைத்து விவசாயிகளுக்கும் கடனை இரத்துச் செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் போனதற்குத்தான் அவர்கள் தடை உத்தரவு கொடுத்திருக்கிறார்களேயொழிய, கொள்கை முடிவு எடுக்கிற அதிகாரம் உங்களுக்கு இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்*

[திரு. எ.வ. வேலு:] [2017 ஜூலை 4

கொண்டுவர விரும்புவது, வறட்சியின் கொடுமையால் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் அவலநிலை தமிழ்நாட்டில் இருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியும்; அதோடுமட்டுமல்ல, விவசாயிகளுக்கு எதிராக இந்த அரசு மாறிவிடக் கூடாது என்ற அடிப்படையிலேதான் எதிர்க்கட்சியாக இருக்கிற நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள்.

திரு. எ.வ. வேலு: அரசின் கொள்கை முடிவில் நீதிமன்றம் தலையிட முடியாது என்பது உங்கள் வாதம் என்று சொன்னால், உயர் நீதிமன்றத்தின் உத்தரவை நீங்கள் விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இதற்குப் பதில் சொல்லுங்கள். நிறைய விவரங்கள் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அடுத்து சொல்லலாம். (குறுக்கீடு) மிகவும் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதிகமாகப் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) Conclude செய்து உரையை முடியுங்கள்.

திரு. எ.வ. வேலு: அதிகமாக இல்லை. (குறுக்கீடு) கிடையாது, நான் சொல்வதைப் புரிந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு விவசாயிக்காகவும்தான் நான் பேசுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். கொள்கை முடிவு எடுக்கிற அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. எனவே, அனைத்து விவசாயிகளுக்கும் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் இங்கு இருக்கிற அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களின் சார்பாகவும் நான் கேட்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள், அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார். இதுகுறித்துதான் உயர் நீதிமன்ற மதுரை

கிளையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையிலேதான் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த நிதி ஆதாரங்கள், நிதியைப் பொறுத்த அளவிற்கு சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறதா, நீதிமன்றங்கள் முடிவு எடுக்கலாமா என்பதையெல்லாம் அறிந்துகொள்வதற்காகத்தான் அங்கே போனோம். எனவே, அதுகுறித்து உச்ச நீதிமன்றம் இடைக்கால ஆணை பிறப்பித்திருக்கிறது. எனவே, இந்த நேரத்தில் அதுகுறித்து விரிவாக விளக்குவது சாலப் பொருத்தமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகச் சொல்வது என்னவென்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே தேர்தல் காலத்திலே சிறு, குறு விவசாயிகளுக்கு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னார்கள், அதேபோன்று தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதிலே ஒன்றும் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. எனவே, இன்றைக்கு இதுகுறித்து மற்ற விவரங்களைப் பேசினால் உச்ச நீதிமன்ற அவமதிப்பாகிவிடும். எனவே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைப் பெற்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சென்று நிச்சயமாகக் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்டல், கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் துறைமுகத்திற்கு விசைப்படகை அரசு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி சார்பாக இரண்டு பேர் பேசிவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, சொல்லுங்கள்.*

*****திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பட்டியைச் சேர்ந்த* IND TN06 MM523 *எண் கொண்ட விசைப் படகில் கடந்த 21–6–2017 அன்று 8 மீனவர்கள் புறப்பட்டனர். 24–6–2017 வெள்ளிக்கிழமையன்று கோடியக்கரைக்கு நேர் கிழக்கே 33* Nautical mile *தொலைவில் நமது இந்தியக் கடல் பகுதியில் அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மோனிஸ், செல்வம், ராஜசேகர்,*